[1982 மார்ச் 24

[முற்பகல் 9–40]

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, காவேரி டெல்டா பகுதியை மேம்பாடு செய்வது என்பது நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத் தரணியை மேலும் சிறப்பான வகையில் பயிர் வளம் கொழிக்கச் செய்வதற்கான ஒரு முயற்சி, அந்தப் பகுதி வெள்ளக்காலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது. வறட்சிக் காலத்தில் தண்ணீர் வராமல் பாதிக்கப்படுகிறது. இந்த காவிரி நதி நீர் பற்றி தொடர்ந்து பேச்சுவார்த்தையும் நடைபெற்று வருகிறது. தஞ்சைத் தரணி வறட்சியிலும் வெள்ளத்திலும் பாதிக்கப்படுவதினால் அரசு துரிதமான நடவடிக்கை எடுத்து, பேச்சுவார்த்தையை முடித்து, அந்தப் பகுதியை மேம்பாடு செய்ய துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே குறிப்பிட்ட மாதிரி காவிரி நதி டெல்டா பகுதி மழைக்காலத்திலும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்படுகிறது; வறட்சிக் காலத்திலும் தண்ணீர் வராமல் பாதிக்கப்படுகிறது; ஆகவே, விரைவில் அந்த டெல்டா பகுதியை மேம்படுத்துவதோடு நவீனப்படுத்தும் திட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே எந்த எந்த பகுதிகள் என்பதெல்லாம் குறிப்பில் இல்லை. பொதுவாக நவீனப்படுத்தும் திட்டத்தினுடைய நோக்கமே தஞ்சை மாவட்டத்தினுடைய நிலைமைகளைக் கருதிப் பார்த்து உருவாக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வஃபு போர்டு

*வினா எண். 640—திரு. கே. ரமணி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) வக்ஃபு போர்டை அரசு கலைத்தது உண்மையா?

1982 மார்ச் 24]

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணங்கள் யாவை ?

(இ) வக்ஃபு போர்டின் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முறை முறைகேடுகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) வக்ஃபு வாரியத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள் வாரியத் தலைவரோடு கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர். இதனால் வக்ஃபு வாரியத்தின் பணிகளும் கடமைகளும் தடைபட்டு அது செயலற்ற நிலையிலிருந்தது. மீண்டும் வக்ஃபு வாரியத்தை இயங்கச் செய்யும் நோக்கத்தில் அரசு வக்ஃபு வாரியத்தைக் கலைத்தது.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த வக்ஃபு போர்டை கலைத்து விட்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது அந்த வக்ஃபு போர்டு இயங்குகிறதா? மேலும் வக்ஃபு போர்டுக்கு சில குறைகளைப் பற்றி எழுதினாலும் அங்கே இருக்கிறவர்கள் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா ? கும்பகோணத்தில் இப்படிப்பட்ட வக்ஃபு போர்டுக்குச் சொந்தமான இடங்களை சமூக விரோதிகள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, அங்கிருந்து சில சமாதிகளைக் கூட அடித்துத் தள்ளியிருந்தார்கள். வக்ஃபு போர்டுக்கு அதுபற்றி எழுதியிருக்கிறேன். இப்படிப்பட்ட காரியங்களில் இனி மேலாவது அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, புதிதாக வக்ஃபு போர்டு திருத்தி அமைக்கப்பட்டு, இப்போது செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பிரச்சனைகளை அரசு எற்கனவே தலையிட்டு, நியாயம் வழங்கும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும். முஸ்லீம், முஸ்லீம் அல்லாதவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். வழக்கு மன்றம் இருக்கிறது. எனவே அரசு இதிலே செயல்பட முடியாமல் அல்ல. நிதானமாக ஆனால் உறுதியாக செயல்படுகிற கொள்கையை கடைபிடிக்கிறது. தொடர்ந்து இந்த முறை பின்பற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.